CNR NO:TNTH13-002089-2023

நீதித்துறை நடுவர் நீதிமன்றம், போடிநாயக்கனூர்.

**முன்னிலை : திரு.M.நல்லகண்ணன், B.Com., B.L.,**
நீதித்துறை நடுவர், போடிநாயக்கனூர்.

2025-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 20-ஆம் நாள் வியாழக்கிழமை

குற்றவியல் பல்வகை மனு எண்.1732/2023

அரசுக்காக சார்பு ஆய்வாளர்,
போடி அனைத்து மகளிர் காவல்நிலையம்,
குற்ற எண்.19/2022. ..... மனுதாரர்/குற்றமுறையீட்டாளர்

**/ எதிர் /**

தங்கபவித்ரா,
க/பெ.கார்த்திகேயன். ..... எதிர்மனுதாரர்/நிகர்நிலைப் புகார்தாரர்

1).தினேஷ்பாபு,
த/பெ.காளிதாஸ்.

2).தங்கபாண்டீஸ்வரி,
க/பெ.தினேஷ்பாபு. ..... எதிரிகள்

1).காளிதாஸ்,
த/பெ.பாபு.

2).சௌந்திரபாண்டி,
த/பெ.பாபு.

3).மல்லிகா,
க/பெ.சௌந்திரபாண்டி. ..... நீக்கம் செய்யப்பட்ட எதிரிகள்

*****

இந்த மனுவானது என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்/குற்றமுறையீட்டாளர் தரப்பில் மனுதாரரே முன்னிலையாகி எடுத்துரைத்த வாதுரைகள் மற்றும் ஆவணங்களைப் பரிசீலித்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்…..

**உத்தரவு**

1). இவ்வழக்கின் எதிரிகளான காளிதாஸ், சௌந்திரபாண்டி மற்றும் மல்லிகா ஆகியோர்களை இவ்வழக்கிலிருந்து நீக்குவது சம்மந்தமாக இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2). **மனு உரை சுருக்கம்**:–

2.1). வாதி தங்கபவித்ரா என்பவருக்கும், 1-ஆம் எதிரியின் மகன் கார்த்திகேயன் என்பவருக்கும் கடந்த 15.02.2021-ஆம் தேதி இந்து முறைப்படி திருமணம் நடைபெற்றதாகவும், வாதி M.B.A., வரை படித்துள்ளதால், எதிரிகள், வாதியின் பெற்றோரை ஏமாற்றி, மோசடி செய்து, எதிரிகளுக்கு சொந்த வீடு 1200 சதுரடி இருப்பதாகவும், ஏலத்தோட்டம் இருப்பதாகவும் பொய்யாக கூறி, வாதியின் கணவரின் படிப்புச் சான்று, salary slip ஆகியவற்றைக் காட்டியதால், கணவரை அழைத்துக்கொண்டு தனிக்குடித்தனம் சென்றதாகவும்,

2.2). இந்நிலையில், 4-ஆம் எதிரி கேரளாவில் ஏலக்காய் தொழில் செய்வதாகக் கூறி ரூ.65,00,000/-ம் இலட்சம் கடன் வாங்கிக் கொண்டு ஓடி வந்துவிட்டதாகவும், கடன் கொடுத்தவர்கள் போடிக்கு தேடி வர ஆரம்பித்ததும், குடும்பச் சொத்தை 1-ஆம் எதிரி,

வாதியின் கணவரின் பாகத்தையும் சேர்த்து விற்பனை செய்ய முயற்சித்ததாகவும், வாதியின் கணவர் மறுக்கவே, 4-ஆம் எதிரி கடன் தொல்லை தாங்க முடியாமல் சிவகாசிக்கு ஓடிவிட்டதாகவும்,

2.3). இதனால் கடன் கொடுத்தவர்கள் வாதியையும், அவரது கணவரையும் கடன் ரூ.65,00,000/-ம் கேட்டு தொந்தரவு செய்ததாகவும், இதன் காரணமாக வாதியின் கணவருக்கு ஏற்பட்ட மனஉலைச்சல் மற்றும் கடன்காரர்களின் தொந்தரவும், பணிச்சுமைகளுக்கிடையே விரக்தி ஏற்பட்டதாகவும், மேலும், திருமணமாகி வாதியுடன் சந்தோஷ வாழ்க்கை வாழ முடியவில்லை என்ற மனவிரக்தியில் கடந்த 07.01.2022-ஆம் தேதி வாதியின் கணவர் தற்கொலை செய்து இறந்து விட்டதாகவும்,

2.4). வாதியின் கணவர் இறந்த ஈமச்சடங்கு காரியங்களை வாதியே கவனித்ததாகவும், வாதியின் கனாவர் இறந்த பின்பு கடந்த 05.02.2022-ஆம் தேதி வாதியின் கணவர் இறந்து 30 நாள் முடிந்தவுடன், வாதியை, 1-ஆம் எதிரி தொலைபேசியில் தொடர்பு கொண்டு வீட்டிற்கு வரச்சொன்னதாகவும், வாதியும், அவரது பெற்றோர் மற்றும் வாதி உடன் பிறந்த சகோதரி மற்றும் சகோதரியின் கணவர் சுரேஷ்குமார் ஆகியோர் எதிரிகள் வீட்டிற்குச் சென்றதாகவும்,

2.5). அங்கு ஏற்கனவே திட்டமிட்டு தயாராக இருந்த எதிரிகள், வாதியைப் பார்த்ததும் நல்ல முறையில் பேசுவது போல நடித்து, வாதி வீட்டிற்குள் போனதும் கதவை பூட்டிக்கொண்டு, ஒரு வெள்ளை காகிதத்தையும், பத்திர பேப்பரையும் காட்டி, இனிமேல் இந்த குடும்பத்திற்கும் உனக்கும் எந்த சமபந்தமும் இல்லையென கையெழுத்து போடு எனக் கூறி வாதியை கட்டாயப்படுத்தியதாகவும், வாதி மறுக்கவே, ஏண்டி தேவிடியா புண்டா மகளே, உன்னால் எங்கள் குடும்பத்திற்கு தாண்டி நஷ்டம், நீ என்ன வாரிசா பெத்து குடுத்த, ஒழுங்கா கையெழுத்து போடு எனக் கூறி வாதியை கட்டாயப்படுத்தியதாகவும்,

2.6). வாதி மறுக்க, 1-ஆம் எதிரி, 3, 5 எதிரிகளிடம், வாதியை பிடித்து கையெழுத்து போட வையுங்க எனச் சொல்ல, 2, 4 எதிரிகள் கையால் மாறி, மாறி அடித்தும், முடியைப் பிடித்து இழுத்து, வாதியை கையெழுத்துப் போடாட்டி கொல்லாமல் விடாதீங்க என சத்தம் போட, வாதி தன்னை விட்டு விடுங்கள் எனச் சொன்னதாகவும், கேளாமல் எதிரிகள் ஒன்று சேர்ந்து, வாதியை பெண் என்றும் பாராமல் கட்டாயப்படுத்தி, சித்ரவதை செய்து அடித்ததாகவும், மோசடியாக ஏதோ பேப்பரில் கையெழுத்து வாங்கிக் கொண்டு வீட்டை விட்டு கட்டாயப்படுத்தி துரத்தியதாகவும்,

2.7). இதனால் எதிரிகள், தன்னை அடித்ததில், தனக்கு உடலில் சிராய்ப்பு காயமும், கழுத்தில் காயமும், கை, கால்களில் அடித்ததில் உடலில் வலியும் ஏற்பட்டு, சோர்வடைந்து வாதி கீழே விழுந்ததாகவும், தன்னை எதிரிகள் அடித்ததில் வலி தாங்க முடியாமல், வாதி கடந்த 05.02.2022-ஆம் தேதி போடி அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் புகார் கொடுக்கச் சென்றபோது, இரவு நேரம் புகார் எடுக்க முடியாது எனக் கூறி காவல்நிலையத்தில் தன்னை பகலில் வரச்சொல்லி, இப்போது போடி அரசு மருத்துவமனைக்கு போங்க என அனுப்பியதாகவும், போடி அரசு மருத்துவைமனையில் 05.02.2022-ஆம் தேதி சிகிச்சை பெற்றதாகவும்,

2.8). கடந்த 05.02.2022-ஆம் தேதி போடி அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தும், புகாருக்கு சரிவர நடவடிக்கை எடுக்காமல், கடந்த 06.02.2022-ஆம் தேதி CSR ரசீது மட்டும் போட்டதாகவும், CSR எண்:27/2022 என்றும், ஆனால், எதிரிகள் ஆள் பலம், பண பலம் மற்றும் காவல்துறை உயர் அதிகாரி துணையுடன் வாதி மீதும், வாதியின் தந்தை மீதும், வாதியின் அக்கா கணவர் மீதும் போடி நகர் காவல்நிலையத்தில் FIR போட வைத்து, வாதியின் தந்தையை சிறையில் அடைத்ததாகவும், போடி நகர் காவல்நிலைய FIR No.51/2022 என்றும்,

2.9). தன்னை முன்ஜாமீன் எடுக்கச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டார்கள் என்றும், இதனால் சட்டப்படி வாதி பாதிக்கப்பட்டதோடு எதிரிகளின் செய்கையால் உரிய பாதுகாப்பும் இல்லை என்றும், கணவரை இழந்த நிலையில், எதிரிகள் மோசடியால் அனைத்து சட்ட உரிமைகளை இழந்து, வாழ வழியில்லாமல், தன்னுடைய மன உளைச்சல், எதிரிகளால் ஏற்பட்ட உடல் ரீதியான பிரச்சனைக்கு போதிய சட்டப்படியான நடவடிக்கை எடுக்க அலைந்தும் பயனில்லாமல் இருந்து வருவதாகவும், JM நீதிமன்றத்திலிருந்து வரப்பெற்ற கடித எண்.969/2022, CRMP No.3220/2022 பிரகாரம் கனம் JM நீதிமன்றத்திலிருந்து வரப்பெற்ற உத்தரவு கடிதத்தின் பேரில், போடி அனைத்து மகளிர் காவல்நிலைய சிறப்பு சார்பு ஆய்வாளர் திருமதி.பிரேமா என்பவரால் 11.07.2022-ஆம் தேதி 11.30 மணிக்கு மேற்படி வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும்,

2.10). மேற்படி வழக்கினை புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, விசாரணை செய்ததிலிருந்தும், சாட்சிகள் அளித்த வாக்குமூலங்களிலிருந்தும், இவ்வழக்கின் வாதியான தங்கபவித்ரா என்பவர் அவரது கணவர் இறந்து 30-ஆம் நாள் காரியத்துக்காக கடந்த 05.02.2022-ஆம் தேதி மாலை சுமார் 4.30 மணிக்கு போடி திருமலாபுரத்திலுள்ள எதிரிகளின் வீட்டிற்கு வந்தபோது, மேற்படி 4, 5 எதிரிகள் சொத்தில் பங்கு வேண்டாம் என்று எழுதிக் கொடுக்கச் சொல்லி வற்புறுத்தியபோது, வாதியானவர் அதற்கு மறுப்பு தெரிவித்துள்ளதாகவும்,

2.11). அப்போது, மேற்படி 4, 5 எதிரிகள், ஏண்டி தேவிடியா, நீ என்ன வாரிசா பெத்து கொடுத்த என்று சொல்லி வாதியை அசிங்கமாகத் திட்டியும், A4, A5 எதிரிகள் இருவரும் கையால் வாதியின் உடம்பில் மாறி, மாறி அடித்து, வாதிக்கு உடம்பில் சிறுகாயம் ஏற்படுத்தி, வாதிக்கு கொலை மிரட்டல் விடுத்தது உண்மை எனவும், இவ்வழக்கின் A1, A2, A3 எதிரிகள் மூவரும் சண்டையை விலக்கிவிட்டுள்ளனர் எனவும், மேற்படி மூன்று எதிரிகளும், வாதிக்கு எதிராக எவ்வித குற்றச் செயல்களிலும் ஈடுபடவில்லை எனவும், வாதியானவர் நடந்த சம்பவத்தை மிகைப்படுத்தி புகாரில் தெரிவித்துள்ளார் எனவும்

விசாரணையில் தெரிய வருவதால்,

2.12). வாதிக்கு எதிராக எவ்வித குற்றச் செயல்களிலும் ஈடுபடாத இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கையில் எதிரிகளாக குறிப்பிடப்பட்டுள்ள, 1).காளிதாஸ், 2).சௌந்திரபாண்டி, 3).மல்லிகா ஆகிய மூவரும் இவ்வழக்கிலிருந்து நீக்கம் செய்யப்பட்டுள்ளனர் என்றும், A4).தினேஷ்பாபு, A5).தங்கபாண்டீஸ்வரி ஆகிய இருவரையும் இவ்வழக்கின் எதிரிகளாக பாவித்திடுமாறு கோரி மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3). <u>**எதிர்மனுதாரரின் ஆட்சேபனை மனு சுருக்கம்**</u>:–

3.1). மேற்படி குற்ற வழக்கில் தனது தரப்பு புகாரினை காவல்துறை நிராகரித்ததால், நீதிமன்றம் மூலம் தனிநபர் வழக்கு கு.வி.மு.ச பிரிவு 156(3) தாக்கல் செய்ததன் மூலம், Cr.No.19/2022 வழக்கு தாக்கல் செய்யப்பட்டதாகவும்,

3.2). அதில் முதல் குற்றவாளியாக காளிதாஸ் நீக்கப்பட்டு, RCS செய்து, நீதிமன்றத்திற்கு இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், மேற்படி நபர் தனக்கெதிராக குற்றம் புரிந்ததற்குப் போதுமான சாட்சிகள் உள்ளதாகவும், சுரேஷ்குமார், ஜெயவெங்கடேஷ் உள்ளனர் என்றும்,

3.3). மேற்படி வழக்கின் முக்கிய குற்றவாளி 1-ஆம் எதிரி காளிதாஸ் என்பதால், அவரை நீக்கும்பட்சம் வழக்கின் புலன் விசாரணை, சாட்சிகள் கலைக்கப்பட்டு, தனக்கெதிராக போதிய சட்டப்படியான நியாயம் கிடைக்காது என்றும், ஆகவே, மேற்படி 1-ஆம் எதிரி காளிதாஸ் நீக்கத்தை ஏற்காமல் வழக்கில் சேர்க்க உத்திரவிடுமாறு கோரி இந்த ஆட்சேபனை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4). மனுதாரரின் மனுவானது அனுமதிக்கப்பட வேண்டுமா? இல்லையா? என்பதே இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனையாகும்.

4.1). மனுதாரர்/குற்ற முறையீட்டாளர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இறுதி அறிக்கையில், எதிர்மனுதாரர்/நிகர்நிலை புகார்தாரரான தங்கபவித்ரா என்பவரால் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டு, அதன் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டதாகவும்,

4.2). பின்னர், முதல் தகவல் அறிக்கையில், எதிரிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ள காளிதாஸ், சௌந்தரபாண்டி, மல்லிகா ஆகிய மூன்று பேரும் சண்டையை விலக்கி விட்டுள்ளனர். எனவே, மேற்படி மூன்று எதிரிகளும் வாதிக்கு எதிராக எவ்வித குற்றச்செயலிலும் ஈடுபடவில்லை எனவும், வாதியானவர் நடந்த சம்பவத்தை மிகைப்படுத்தி புகாரில் தெரிவித்துள்ளார் எனவும் விசாரணையில் தெரிய வருவதால், மேற்படி 3 நபர்களையும் எதிரி பட்டியலில் இருந்து நீக்கம் செய்து இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4.3). மேற்படி எதிரிகள் நீக்கல் அறிக்கைக்கு எதிராக எதிர்மனுதாரர்/நிகர்நிலை புகார்தாரரான தங்கபவித்ரா என்பவர் தாக்கல் செய்துள்ள ஆட்சேபனை மனுவில், முதல் குற்றவாளியாக காளிதாஸ் நீக்கப்பட்டு, RCS செய்து, நீதிமன்றத்தில் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி நபர் தனக்கு எதிரான குற்றம் புரிந்ததற்குப் போதுமான சாட்சிகள் சுரேஷ்குமார், ஜெயவெங்கடேஷ் உள்ளனர். மேற்படி நபரை நீக்கும் பட்சத்தில், வழக்கின் புலன் விசாரணை, சாட்சிகள் கலைக்கப்படும் எனக் கூறப்பட்டுள்ளது.

4.4). இருப்பினும், நீக்கப்பட்ட எதிரிக்கு எதிராக போதிய சாட்சி உள்ளது எனக் குறிப்பிட்டு இருந்தாலும்கூட, அவர்கள் தரப்பு விவரம் சாட்சிய விசாரணையின் போதுதான் தெரியவரும். மேலும், நீக்கப்பட உள்ள எதிரிகளுக்கு எதிராக எவ்வித ஆவண சாட்சியமும் இல்லாததால், மனுதாரரின் இந்த மனுவை அனுமதிப்பதுதான் நீதியின் நலனுக்கு உகந்தது என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது. மேலும், நிகர்நிலை புகார்தாரர் சாட்சியத்தின் வாயிலாக நிரூபிக்கும் பட்சத்தில், பிரிவு 358 BNSS-ன் கீழ் தீர்வழி உள்ளது என்பதால், மனுதாரரின் மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

4.5). எனவே, நீக்கப்பட்ட நபர்களைத் தவிர்த்து, மற்ற எதிரிகளுக்கு எதிராக வழக்கை மேல் எடுக்க உத்தரவிடப்பட்டு, எதிர்மனுதாரர்/நிகர்நிலைப் புகார்தாரரின் ஆட்சேபனை மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

5). முடிவாக, மனுதாரர்/குற்றமுறையீட்டாளர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவானது அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, திறந்த நீதிமன்றத்தில் நீதிமன்ற இலட்சணையுடன் 2025 நவம்பர் திங்கள் 20-ஆம் நாளாகிய இன்று அவையறிய பகரப்பட்டது.

NALLA KANNAN M

Digitally signed by NALLA KANNAN M
Date: 2025.11.20 18:35:17 +0530

நீதித்துறை நடுவர்
போடிநாயக்கனூர்.